**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை – **செல்வி V. பார்கவி,B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி , சீர்காழி
********

2021–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22–ம்நாள் புதன்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2052, பிலவ வருடம் புரட்டாசி மாதம் 06–ம்நாள்
**********

**அசல் வழக்கு எண். 80/2021–ல் இடைமனு எண். 3/2021**

1. அனிதா
2. ரகுராமன்
3. சங்கீதா
4. கவிதா ..மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்...

சித்ரா ..எதிர்மனுதாரர்/4–ம் பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 13.09.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு 23.07.2021 அன்று எதிர்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பு வாதுரையைக் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

தாவா சொத்தில் எதிர்மனுதாரர்/ 4–ம் பிரதிவாதியோ அவரைச் சார்ந்தவர்களோ அல்லது முகவர்களோ எவ்வித கட்டுமானங்களும் கட்டக்கூடாது என்று அசல் வழக்குமுடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு..ச.கட்டளை 39, விதிகள் 1 மற்றும் 2 –ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை, விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாச்சொத்து சீர்காழி தாலுக்கா 48, சட்டநாதபுரம் கிராமம் சூரக்காடு மேலத்தெருவில் அமைந்துள்ளது. தாவா சொத்து மாடசாமி என்பவருக்கு சொந்தமானது. மாடசாமி என்பவர் 14.11.2002 அன்று இறந்துவிட்டார். இறந்த மாடசாமியின் மனைவி லட்சுமி 2017–ம் ஆண்டு இறந்துவிட்டார். இறந்த மாடசாமி மற்றும் லெட்சுமி தம்பதியினருக்கு ராஜாராமன் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் வாரிசுகள்.

அவர்களில் ராஜாராமன் என்பவர் 24.02.2011 அன்று இறந்துவிட்டார். இறந்த ராஜாராமனின் மனைவி மகன் மற்றும் மகள்கள் மனுதாரர்கள்/வாதிகள். இறந்த ராஜாராமனுக்குரிய சொத்துக்கள் மனுதாரர்களுக்கு சேர வேண்டியது. இறந்த மாடசாமிக்கு சொந்தமான வழக்குச் சொத்தில் வாரிசு முறையில் இறந்த ராஜாராமனுக்கு 1 / 4 பாகமும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலாக 1 / 4 பாகமும் சட்டப்படி கிடைக்கக்கூடியது. தாவா சொத்தில் இறந்த ராஜாராமனின் 1 / 4 பாகசொத்து மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய நிலையில் தாவா சொத்தை மனுதாரர்களும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் ஒன்றாக கூட்டாக அனுபவித்து வந்த நிலையில் முதல் பிரதிவாதி தாவா சொத்தை மூன்றாம் நபர்களுக்கு கிரயம் செய்ய முற்பட்டார்.

3. இதை அறிந்த 2–ம்வாதி தாவா சொத்தை மூன்றாம் நபர்களுக்கு எவ்வித கிரயம் செய்யக்கூடாது என முதல்பிரதிவாதி மற்றும் 5–ம்பிரதிவாதியின் மீது நிரந்தர உறுத்துக்கடட்ளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண். 181/2019 என்ற வழக்கை 02.12.2019 அன்று தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 2–ம்வாதி தாக்கல் செய்த மேற்படி வழக்கை வாபஸ் பெற உரிய நடவடிக்கை எடுத்து வருகிறார். தாவா சொத்தில் மனுதாரர்களுக்குரிய 1 / 4 பாகத்தை பிரித்துக்கோரி முதல் பிரதிவாதியிடம் 2020–ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கேட்டும், பிரித்து தருவதாக கூறி வந்த முதல் பிரதிவாதி 01.02.2021 அன்று தாவா சொத்தில் 280 சதுர மீட்டரை 4–ம்பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி விவரம் மனுதாரர்களுக்கு தாவாச்சொத்தைப் பொறுத்த வில்லங்க சான்று 07.06.2021 அன்று வாங்கி பார்த்தபொழுதுதான் தெரியவந்தது. எனவே தாவாச்சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளுக்குரிய 1 / 4 பாகம் பிரித்துக்கொடுப்பதற்காக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி அசல் வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளனர். இந்நிலையில் பாகம் பிரிபடாத தாவா சொத்தில் 210 சதுரமீட்டரை மாடசாமி மனைவி லெட்சுமி மற்றும் 2,3 பிரதிவாதிகளும் முதல் பிரதிவாதிக்கு 26.04.2016 அன்று 5 –ல் 3 பாக வீதத்தைப்பொறுத்து ஒரு பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்து அது 5–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஆவண எண். 1161/2016 ஆக 26.04.2016 அன்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. பாகம் பிரிபடாத தாவாச் சொத்தில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு எந்த பாகமும் ஒதுக்கப்படாத நிலையில் மேற்படி பாக பாத்திய விடுதலைப்பத்திரம் மனுதாரர்களுக்கு தெரியாமல் ஏற்படுத்திக் கொண்டது செல்லாது.

4. எனவே 26.04.2016–ம் தேதியிட்ட 5–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஆவண எண். 1161/2016 ஆக பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலைப் பத்திர ஆவணம் செல்லாது என்று விளம்பல் பரிகாரம் வாதிகள் இந்த வழக்கில் கோரியுள்ளனர். மேற்படி பாக பாத்ய விடுதலைப் பத்திரத்தை அனுசரித்து தாவா சொத்தில் 00280 சதுர மீட்டரை முதல் பிரதிவாதி 01.02.2021

அன்று 4–ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து அது 5–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஆவண எண். 298/2021 ஆக 01.02.2021 அன்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் மனுதாரா்களுக்கு எந்த பாகம் என்று ஒதுக்கப்படாத நிலையில் மேற்படி கிரய சாசனம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, அந்த ஆவணம் மனுதாரா்களின் பாக உாிமையை கட்டுப்படுத்தாது. எனவே மேற்படி 01.02.2021–ம் தேதியில் 5–ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஆவண எண். 298/2021 ஆக பதிவு செய்யப்பட்ட கிரயப்பத்திரம் செல்லாது என்ற விளம்பல் பாிகாரமும் மனுதாரா்கள் கோாியுள்ளனா். தாவா சொத்தை பாகம் பிாிபடுவதற்கு முன்பு 4–ம் பிரதிவாதி பாராதீனம் செய்ய முற்படுகிறாா்.

5. மேலும் தாவா சொத்தில் எதிா்மனுதாரா்/4–ம்பிரதிவாதி கட்டிடம் கட்டவும் முயல்கிறாா். மேற்படி சங்கதி மனுதாரா்களுக்கு 07.06.2021 அன்று தொியவந்தது. அவ்விதம் செய்துவிட்டால் மனுதாரா்களுக்கு ஏராள கஷ்டமும், ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஏற்படக்கூடும். ஆட்கள் பலமும், பண பலமும் கொண்ட எதிா்மனுதாரா்/ 4–ம் பிரதிவாதி எதையும் செய்யக்கூடியவா். எனவே தாவா சொத்தை 4–ம் பிரதிவாதி எவ்வித பாராதீனமும் 5–ம் பிரதிவாதி அலுவலகம் மூலம் செய்யக்கூடாது எனவும், எவ்வித கட்டிடமும் கட்டக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை பாிகாரமும் வாதிகள் கோாியுள்ளனா். எனவே தாவா சொத்தில் எதிா்மனுதாரா்/ 4–ம் பிரதிவாதியோ அவரைச் சாா்ந்தவா்களோ அல்லது முகவா்களோ எவ்வித கட்டுமானங்களும் கட்டக்கூடாது என்று அசல் வழக்குமுடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவிடக்கோாி மனுதாரா்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்க வேண்டும்.

6. எதிா்மனுதாரா்/4–ம் பிரதிவாதிக்கு நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டும் 23.7.2021–ம் தேதியன்று எதிா்மனுதாரா் நோிலோ, வழக்கறிஞா் மூலமாகவோல ஆஜராகததால் எதிா்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜாின்மையால் தோன்றாத்தரப்பினா் ஆக்கப்பட்டாா்.

7. <u>இம்மனுவில் தீா்வுக்குாிய பிரச்சனை</u>

மனுதாரா்கள்/ வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

8. இம்மனுவில் மனுதாரா்கள் மற்றும் எதிா்மனுதாரா் இருதரப்பிலும் சாட்சிகள் விசாாிக்கப்படவில்லை. மனுதாரா்கள் இடைமனு எண். 02/2021– ல் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை குறிப்பாணை மூலம் இந்த மனுவிற்கு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிா்மனுதாரா் தரப்பில் சாட்சிகள் விசாாிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

9. **<u>தீர்வு</u>**

9.1. மனுதாரா்கள் தரப்பில் தாவா சொத்து மாடசாமி என்பவருக்கு சொந்தமானது என்றும், மாடசாமி 14.11.2002–ம் தேதியன்றும், மாடசாமியின் மனைவி லெட்சுமி 2017–ம் ஆண்டிலும் இறந்துவிட்டனா் என்றும், அவா்களுக்கு ராஜாராமன் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் வாாிசுகள் என்றும், மேற்படி ராஜாராமன் 24.02.2011 அன்று இறந்துவிட்டாா் என்றும், இறந்த ராஜாராமனின் மனைவி 1–ம்மனுதாரா் என்றும், 2–ம் மனுதாரா் மகன் என்றும், 3,4 மனுதாரா்கள் மகள்கள் என்றும் இறந்த ராஜாராமனின் சொத்துக்கள் அவரது வாாிசுகள் அடிப்படையில் மனுதாரா்களுக்கு சேர வேண்டியது என்றும், வாாிசு முறையில் தாவா சொத்தில் இறந்த ராஜாராமனுக்கு 1 / 4 பாகமும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலா 1 / 4 பாகமும் சட்டப்படி கிடைக்கக்கூடியது என்றும், இறந்த ராஜாராமனுக்குாிய 1 / 4 பாகம் மனுதாரா்களுக்குக் கிடைக்கக்கூடியது என்றும், தாவா சொத்தை மனுதாரா்களும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வரும் நிலையில் 1–ம் பிரதிவாதி தாவா சொத்தை மூன்றாம் நபா்களுக்கு விற்க முற்பட்டதால் 2–ம்் வாதி தாவா சொத்தை பொறுத்து 1–ம் பிரதிவாதி மற்றும் 5–ம் பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பாிகாரம் கோாி அசல் வழக்கு எண். 181/2019 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையிலிருந்து வருகிறது என்றும், மனுதாரா்கள்/ வாதிகள் இந்த வழக்கை பாகப்பிாிவினை பாிகாரம் கோாி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கை வாபஸ் பெற 2–ம்வாதி உாிய நடவடிக்கை எடுத்து வருகிறாா் என்றும் வாதம் செய்யப்பட்டது.

9.2. மேலும் மனுதாரா்கள் தரப்பில் தாவா சொத்தில் மனுதாரா்களுக்குாிய 1/ 4 பாகத்தை பிாித்துக் கொடுக்க வேண்டி 2020 டிசம்பா் மாதம் கேட்டும் பிாித்துக்கொடுப்பதாக கூறி வந்த 1–ம் பிரதிவாதி 01.02.2021 அன்று தாவா சொத்தில் 280 சதுர மீட்டா் சொத்தை 4–ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ள விவரம் மனுதாரா்களுக்கு 07.06.2021 அன்று வில்லங்க சான்று எடுத்துப் பாா்த்தபொழுதுதான் தொியவந்தது என்றும், பாகம் பிாிபடாத தாவா சொத்தில் 210 சதுர மீட்டரை மாடசாமி மனைவி லெட்சுமி மற்றும் 2,3 பிரதிவாதிகளும் சோ்ந்து 1–ம் பிரதிவாதிக்கு 26.04.2016 அன்று ஒரு பாக பாத்திய விடுதலைப்பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளனா் என்றும், மனுதாரா்களுக்கு தொியாமல் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பாத்திய விடுதலை மனுதாரா்களின் பாகத்தைப் பொறுத்து செல்லாது என்றும், அந்த பத்திரம் செல்லாது என்ற விளம்பல் பாிகாரம் கோாியும் மேற்படி பாகப்பாத்திய விடுதலையை அனுசாித்து தாவா சொத்தில் 00280 சதுர மீட்டரை 1–ம்பிரதிவாதி 01.02.2021 அன்று 4–ம் பிரதிவாதிக்கு 5–ம் பிரதிவாதி அலுவலகம் மூலம் ஆவண எண்.298/2021 ஆக 01.02.2021 அன்று கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது செல்லாது என்றும் அது மனுதாரா்களின்

பாகஉாிமையை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகை பாிகாரம் கோாியுள்ள தாவா சொத்தை பாகம் பிாிபடுவதற்கு முன் 4–ம் பிரதிவாதி அதை பாராதீனம் செய்ய முற்படுகிறாா் என்றும், எனவே தாவா சொத்தில் எதிா்மனுதாரா்/ 4–ம் பிரதிவாதியோ அவரைச் சாா்ந்தவா்களோ அல்லது முகவா்களோ எவ்வித கட்டுமானங்களும் கட்டக்கூடாது என்று அசல் வழக்குமுடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவிடக்கோாி மனுதாரா்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் வாதம் செய்யப்பட்டது.

9.3. இந்த மனுவின் எதிா்மனுதாரா்/4–ம் பிரதிவாதிக்கு நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டும் 23.7.2021–ம் தேதியன்று எதிா்மனுதாரா் நோிலோ, வழக்கறிஞா் மூலமாகவோ ஆஜராகாததால் எதிா்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜாின்மையால் தோன்றாத்தரப்பினராக உள்ளாா்.

9.4. மனுதாரா்கள் தரப்பிலும், எதிா்மனுதாரா் தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் இல்லை. மனுதாரா்கள் தங்கள் மனுவிற்கு ஆதரவாக 1–ம் பிரதிவாதி லெட்சுமி மற்றும் 2,3 பிரதிவாதிகள் 26.04.2016 அன்று செய்துகொடுத்த பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தின் சாா்பதிவக நகலை ம.சா.ஆ.1 ஆகவும், 1–ம் பிரதிவாதி 4–ம் பிரதிவாதிக்கு 01.02.2021 அன்று எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சாா்பதிவக நகலை ம.சா.ஆ.2 ஆகவும், 07.06.2021–ம் தேதியிட்ட தாவாச்சொத்தினைப் பொறுத்த வில்லங்க சான்றை ம.சா.ஆ.3 ஆகவும், தாவா சொத்தின் வழிகாட்டு மதிப்பின் நகலை ம.சா.ஆ.4 ஆகவும், சீா்காழி மாவட்ட உாிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண். 181/2019 ன் வழக்குரையின் நகலை ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்துள்ளாா்கள். மனுதாரா்கள் தரப்பில் இடைமனுஎண். 02/2021–ல் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மனுதாரா்களின் குறிப்பாணை மூலம் இந்த மனுவிற்கு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளன.

9.5. எனவே இந்நிலையில் தாவாச்சொத்து மாடசாமி என்பவருக்கு சொந்தமானது என்பதும், மாடசாமியும் அவரது மனைவி லெட்சுமியும் இறந்துவிட்டனா் என்பதும், இறந்த மாடசாமி–லெட்சுமி தம்பதியினருக்கு 1–ம்மனுதாராின் கணவரும் 2 மதல் 4 மனுதாரா்களின் தகப்பனாருமான ராஜாராமன் என்பவரும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் வாாிசுகள் என்பதும், அதன் அடிப்படையில் தாவாச்சொத்தில் மனுதாரா்களுக்கு 1 / 4 பாகமும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தலா 1 / 4 பாகமும் கிடைக்கக்கூடியதாக உள்ளநிலையில் தாவா சொத்தினைப் பொறுத்து பாகம் பிாிபடாமல் 26.04.2016 அன்று 1–ம் பிரதிவாதிக்கு லெட்சுமி மற்றும் 3,4 பிரதிவாதிகள் பாகப்பாத்தியம் எழுதிக்கொடுத்துள்ளதை ம.சா.ஆ.1 ஆவணம் உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது. மேலும் 4–ம் பிரதிவாதிக்கு 1–ம் பிரதிவாதி 01.02.2021

அன்று கிரயப் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளாா் என்பதை ம.சா.ஆ.2 ஆவணம் உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது. எனவே இந்நிலையில் மனுதாராா்கள்/ வாதிகள் இம்மனுவில் கோாியுள்ள பாிகாரமான தாவா சொத்தில் எதிா்மனுதாராா் / 4–ம் பிரதிவாதியோ அவரை சாா்ந்தவா்களோ அல்லது முகவா்களோ அசல் வழக்கு முடியும் வரையில் எவ்விதமாக கட்டுமானமும் கட்டக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை பாிகாரம் வழங்குவதற்கான முதல்நோக்கு வழக்கும் (Primafacie) , உறுதிச்சமநிலையும் ( Balance of Convenience) மனுதாராா்களுக்கு சாதகமாக உள்ள நிலையிலும், மாறாக எதிா்மனுதாராா் தரப்பில் இம்மனுவில் ஆஜராகி கட்சி செய்ய முன்வராமல் உாிய காலஅவகாசம் கொடுத்து அறிவிப்புக் கொடுத்தும் நீதிமன்றத்தில் ஆஜாின்மையால் தோன்றாத்தரப்பினராக உள்ள நிலையிலும் மனுதாராா்கள் இம்மனுவில் கோாியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளைபாிகாரம் அசல் வழக்கு முடியும் வரையில் மனுதாராா்களுக்கு கிடைக்கக்கூடியது என்றும், மனுவின் தன்மை கருதி இம்மனுவில் மனுவின் செலவுத்தொகையை மனுதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீா்வு காணப்படுகிறது.

முடிவில் இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு தாவா சொத்தில் எதிா்மனுதாராா்/ 4–ம் பிரதிவாதியோ அவரைச் சோ்ந்தவா்களோ அல்லது முகவா்களோ அசல் வழக்கு முடியும் வரையில் எவ்விதமான கட்டுமானமும் கட்டக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சாிபாா்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021–ம் ஆண்டு செப்டம்பா் மாதம் 22–ம்நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உாிமையியல் நீதிபதி,
சீா்காழி.

பின் இணைப்பு

மனுதாராா்கள் சாட்சி சாட்சிகள் – இல்லை–

எதிா்மனுதாராா் தரப்பு சாட்சிகள் – இல்லை–

மனுதாராா்கள் தரப்பில் இடைமனு எண்.02/2021-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறிப்பாணை மூலம் இந்த மனுவிற்கு ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மனுதாராா்கள் தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 26.04.2016 | 1–ம் பிரதிவாதிக்கு லெட்சுமி மற்றும் 2,3 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலைப் பத்திரத்தின் சாா்பதிவக நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | 01.02.2021 | எதிர்மனுதாரருக்கு 1–ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சார்பதிவக நகல் |
| ம.சா.ஆ.3 | 07.06.2021 | தாவாச் சொத்திற்குண்டான கணிணி வில்லங்க சான்றின் கணிணி நகல் |
| ம.சா.ஆ.4 | 15.06.2021 | தாவா சொத்தின் வழிகாட்டுதல் மதிப்பின் கணிணி நகல் |
| ம.சா.ஆ.5 | – | சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண். 181/2019–ன் வழக்குரையின் நகல் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> –இல்லை–

மா.உ.நீ.